**காஞ்சிபுரம் மாவட்ட இணையதளத்தில் ‘‘சிற்ப காஞ்சி’’ எனும் புதிய வலைதள இணைப்பு பக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு தகவல்களை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் மாவட்ட இணையதளம் உருவாக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது. அதனை மெருகூட்டும் வகையில் மாவட்ட இணையதளத்தில் “சிற்ப காஞ்சி” எனும் புதிய வலைதள பக்கம் உருவாக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் “சிற்ப காஞ்சி” புதிய வலைதள பக்கத்தினை தொடங்கி வைத்தார்.

இந்த “சிற்ப காஞ்சி” புதிய வலைதள பக்கத்தில் மாவட்டத்தில் உள்ள ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, கல்வித்துறை, வேளாண்மைத்துறை, போக்குவரத்துத்துறை, வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலத்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை உள்ளிட்ட துறைகளின் சார்ந்து செயல்படுத்தப்பட்டுள்ள வளர்ச்சி பணிகள், திட்டங்கள் மற்றும் அந்தந்த துறைகளின் சார்பில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகள் குறித்த புகைப்படங்கள் இடம்பெற்றிருக்கும். அப்புகைப்படங்கள் முறையாக “சிற்ப காஞ்சி” புதிய வலைதள பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்படும். அப்பதிவுகளை புதிய வலைதள பக்கத்தில் மக்கள் பார்வையிட்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியின்போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், காஞ்சிபுரம் ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் திருமதி.மு.கவிதா, மதுராந்தகம் ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் திரு.தணிகாச்சலம், தேசிய தகவல் மைய அலுவலர் திரு.முருகன் ஆகியோர் உடனிருந்தார்.

**செய்தி வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்**